சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 27.03.2026 SC.24/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிலைமணி | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW 11 | | | |

-----------------------------------------------------------

<u>முதல் விசாரணை</u>

நான் காவல் துறையில் ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்சமயம் ராமநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றியபோது 14.08.2020ம் தேதி கம்பம் விவேகானந்தர் தெருவில் வசந்தா என்பவர் கொடுத்த புகார் வாக்கு மூலத்தை சார்பு ஆய்வாளர் ரோமியாதாமஸ் என்பவர் பெற்று அன்றைய தினம் 12..15 மணிக்கு அந்த புகாரின் தன்மைக்கேற்ப வழக்கு பதிவு செய்து கம்பம் வடக்கு காவல் நிலைய குற்ற எண்.983/2020 ன்கீழ் பதிவு செய்து 294(b), 341, 307 இ.த.ச,பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து எனது மேல் விசாரணைக்கு வைத்திருந்ததை நான் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 13.00மணிக்கு சம்பவ நடந்த இடம் சென்று சாட்சிகள் வினோத், பால்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர், மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ–8, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆகும். பின்னர் சம்பவ இடத்தில் 14.15 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் இரத்தம் படிந்த மண், இரத்தம் படாத மண் ஆகியவற்றின் அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். அத்தாட்சி அ.சா–ஆ.10 ஆகும். பின்னர் சாட்சிகள் வசந்தா, உதயகுமார், ராமர், நவீன்குமார், பேச்சிமுத்து, வினோத், பால்கண்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 16.30 மணிக்கு கம்பம் ஏலரசு கோவில் அருகில் வைத்து கைது செய்ததற்கான காரணத்தை எடுத்துக்கூறி சாட்சிகள் மணி , மகாலிங்கம் முன்னிலையில் கைது செய்து, எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி 17.45 மணிக்கு அவரது இருசக்கர வாகனத்தின் டேங்க் கவரிலிருந்து கத்தியை அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி. அ.சா.ஆ.11 ஆகும். பின்பு எதிரியை நிலையம் அழைத்து வந்து அவரை திரேத பரிசோதனை செய்து தக்க வழிநடை மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழககில் கைப்பற்ற பட்ட சொத்துக்களை படிவம் 95 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அ.சா.ஆ.12 ஆகும். பின்பு இவ்வழக்கு

சாட்சியான மணி, மகாலிங்கம், மருத்துவர் அசோக்குமார், பாரதி, ஆகியோரை விசாரித்து செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சார்பு ஆய்வாளர் ரோமியோ தாமஸ் விசாரித்து வாக்குமூல்ம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கின் தன்மைக்கேற்ப சட்டப்பிரிவு 341, 294(b), 307 என்ற சட்டப்பிரிவை மாறுதல் செய்து 341, 294(b), 326,307 சட்டமாறுதல் அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.அது. அ.சா.ஆ–13, அதன் பின்னர் 06.11.2020ம் தேதி எதிரி மீது மேற்படி சட்டப்பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

முதல் தகவல் அறிக்கையில் காலம் 16ல் புகார் தாரரின் கையெழுத்தோ, கைரேகை எதுவும் இல்லை என்றால் சரிதான். புகாரில் வசந்தா என்ற கையொப்பம் மட்டும் உள்ளது. தேதி இல்லை என்றால் சரிதான். அ.சா.1 முதல் அ.சா.6, அ.சா8 வரையிலான ஒரே தெருவைச்சேர்ந்த புகார் தாரரின் உறவினர்கள் என்றால் அதைப்பற்றி எனக்க தெரியாது. இந்த வழக்கில் சம்பவ இடத்தில் இருந்த நபர்களை விசாரித்து வாக்குமூலத்தை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. விசாரித்துள்ளேன். சம்பவ இடத்தில் இரத்தக்கறை இருந்ததாக வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட இரத்தத்தை இராசயண பகுப்பாய்வுக்கு அனுப்பி அது எந்த மாதிரியான இரத்தம் என அறிக்கை பெறப்படவில்லை என்றால்சரிதான். TN 64 A 7407 Herohonda இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் யார் என்பது குறித்த வாகனப்பதிவு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தனது வாகனம் என ஒத்துக்கொண்டுள்ளார். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெற்ற இடத்தில் இரத்தக்கறை இருந்தால் அது குறித்து பார்வை மகஜரிலும், வரைபடத்திலும் சொல்லிருப்போன் என்றும், அவ்வாறு சொல்லாததிலிருந்தே சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வரைபடத்தில தனியாக குறிப்பிட்டு காட்டவில்லை. பார்வை மகஜரில் சொல்லியுள்ளேன். பார்வை மகஜரும், வரைபடமும் வெவ்வேறு நபர்கள் தயார் செய்துள்ளாகள் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் செல்லாமல், சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வழக்கு ஆவணங்களை தயார் செய்து ஒரு தலைபட்சமாக குற்ற இறுதி அறிக்கை தாயார் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.03.27 17:42:07 +0530

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்